# குறும்பு

அழைப்பு வந்துவிட்டதும் மனைவிக்கு ஏற்பட்டுவிட்ட பரபரப்புபைக் கண்டு சிரித்துக் கொண்டார் துரைசாமி.

"தீபாவளிக்கு ஒரு வாரம் இருக்கும்பொழுதே நீங்கள் வந்துவிடவேண்டும்!" எனக்கூறும் அழைப்பைக் கண்டு நாகலக்ஷ்மி மகிழ்ந்து போவதைக் கவனித்தார்.

"ஓஹோ! எல்லாம் மறந்து போச்சு போலிருக்கு! 'ஆடிக்கு வான்னு' மரியாதைக் கடிதம் கூடக் காணோம்! இதுக்கு வந்துவிட்ட அழைப்பை அக்ஷர பரிபாலனம் பண்ணப் போகிற உத்தேசம் போலிருக்கு!' என்று கேட்டு நையாண்டி செய்தார் துரைசாமி.

'ஆமான்னா! எனக்கு மறந்துதான் போச்சு! . . . ஆனால் மறதின்னா ஆடிக்கு அழைப்பு வரல்லைங்கிறதை மறந்துடல்லே! அப்போ எனக்கு வந்திருந்த கோபத்தைத்தான் மறந்துட்டேன்!" எனக் கூறிச் சிரித்தாள் நாகலக்ஷ்மி.

"ஓஹோ!"

"அதென்ன அப்படி ஓஹோப் போடறேள்? என்னமோ, அதிசயமா சம்பந்திகளைக் குறை கூற ஆரம்பிச்சுட்டேள்?'

"ஆமாம்! அப்படித்தான்!"

அவருடைய இந்தப் பதிலைக் கேட்டு நிஜமாகவே நாகலக்ஷ்மிக்கு மாபெரும் வியப்பு! ஆனால் அவள் மேலும் மேலும் கேட்ட கேள்விகள் மேல் மேலே வியப்பையே கொணர்ந்தன.

அழைப்பை அக்ஷர பரிபாலனம் செய்யக்கூடாது என்றால், 'ஒரு வாரம் முந்தி போய்விடக்கூடாது' என்கிறாரோ? அதுவுமில்லை! 'எல்லோருமாக சம்பந்திக் கூட்டமாக நாலு பெரியவர்கள், இரண்டு குழந்தைகள், போகக்கூடாது, பிள்ளை மட்டும் போகட்டும்,' என்கிறாரா? அதுவுமில்லையாம், அவர் எண்ணம்! யாருமே போகக்கூடாதாம்!

"மூர்த்திக்கு எழுதியாச்சு! 'போக வேண்டாம்'னு எழுதிவிட்டேன்!" என்றார்.

"எழுதியாச்சா?' என்று அவள் கேட்டதற்கு, "ஓ! நாலு நாளாச்சு!" என்றார்.

'நாலு நாளாச்சா?' என்று அவள் வியந்த பொழுது, "ஓ! ஆச்சு! பதிலும் வந்தாச்சே எனக்கு!" என்றார்.

"வந்தாச்சா பதில்? எனக்குத் தெரியவே தெரியாதே!" என்று அவள் பதறினபொழுது, அவர் சிரித்தார்.

"உனக்குத் தெரியாமல் வந்திருக்குமா? நீதானே ஒரு வாரமாய் தபாற்காரன் வந்ததும் கடிதம் வாங்கறே!" என்று நினைப்பூட்டினார். "தீபாவளி அழைப்பு வரும், போகணும்னு இந்த ஒரு வாரம் துறுதுறுப்பு, பாவம், உனக்கு! அப்படித்தானே?" என்று கேலி செய்தார். நாகலக்ஷ்மி விழிப்புடன் விழித்தபொழுது, "எனக்கு அவன் பதில் மானசீகமாய் வந்தது!" என்று கூறி முறுவலித்தார்.

"என்னவாம் மானசீக விடை?" என்று அவள் கேட்டாள். "எனக்கு என்ன எழுதறதுன்னு தெரியாமல் தவிக்கிறான், பாவம்! சரி, போகல்லைன்னு எழுத அவனுக்கு மனசு வரல்லை!' என்று கூறிப் புன்னகை புரிந்தார் அவர்!

நாகலக்ஷ்மிக்கு அவருடைய போக்கு ஆச்சரியம் அளித்தது; பேச்சுப் புதிராகத் தோன்றியது.

இவ்வளவெல்லாம் யோசிப்பவர், என்னென்னமோ எண்ணிப்பேசினவர், இன்று ஏன் என்னவெல்லாமோ சொல்கிறார்?

அவருடைய பேச்சினை நகைச்சுவைக்கு ஏற்று, "அழைப்பு இதுக்கும் வராதுன்னு நிச்சயம் பண்ணி நாலு நாள் முந்தி அப்படி எழுதினேளாக்கும்! 'போ'ன்னு இன்னிக்கு எழுதுவேளாக்கும்!" என்றாள்.

ஆனால் அவர் கம்பீரமாக மறுத்தார் அவள் ஊகத்தை. அவருக்கு நிஜமாகவே சம்மந்திகள் மேலே அதிருப்திதானாம்! இன்னொன்றும் சொன்னார்.

"இதில் ஒரு வேடிக்கை நாகு? மூர்த்தி இப்போ எப்படி இருக்கிறான், என்னமாய் மாறியிருக்கு அவன் மனசு. தெரிஞ்சுக்கலாம்! சம்பந்திகளைப் பயமுறுத்தி வச்ச மாதிரியும் ஆச்சு! மூர்த்தி எத்தனை தூரம் பித்ருவாக்கிய பரிபாலனம் செய்கிறான்னு ஊகிக்கவும் சந்தர்ப்பம் ஆச்சு!' என்றார் குறும்புச் சிரிப்புடன். "சரிதான்! நிஜந்தான்" என்று நாகலக்ஷ்மி சமாதானமடைந்து பதிலிறுத்தாள் ஆனால் பல யோசனைகள் அவள் மனதிலே: கணவரின் குறும்புப் புன்னகையை மறுத்துப் பேசி வாதாட குறுகுறுப்பு; அவள் உள்ளத்திலே தடை. 'அவருக்கே தெரியாதா?' என்ற எண்ணம்தான்.

"சம்பந்தி தோரணை கூடாது?" என்று சொன்னார் அவர்; அப்படியே இருந்தார். அவர்தான் அவனைக் கண்டித்து எச்சரித்து, அவளையும் தாம் நினைப்பதுபோல நினைக்க வைத்தார்; நினைக்க அவளைப் பழக்கினார்.

'கொஞ்சம் மதிப்பாக இருக்க வேண்டாமா?' என மனம் பொருமியவள் பெண்ணுள்ளம் படைத்துவிட்ட நாகலக்ஷ்மிதான். அவர் அவள் கவலையைப் பாராட்டவேயில்லை.

மனச்சாட்சி அவர் நினைத்ததையே ஆமோதித்தது. சந்தர்ப்பங்களோ, அவர் நினைத்தபடியே அவர் நடப்பதையே ஆதரித்தன ஆம்! சந்தர்ப்பங்களின் நெருக்கடிதான் அவர் பெண் வீட்டாரை நாடிப்போகும்படி செய்தது; அவர்களை நெருக்க முடியாமல் போய்விட்டது.

திருமண மாதங்கள் துவங்குவதற்குக் கொஞ்ச நாள் முன்னர்தான் - ஜனவரி பிப்ரவரி மாதங்களில்தான் - மூர்த்தி ஒரு கிறுக்குச் சங்கத்திலே கிறுக்குக்கொண்டு, 'சத்தியாக்கிரஹத்துலே சேருவேன்!' என்று பிடிவாதம் செய்தான். அவள் கெஞ்சினாள்; அவரும், மிரட்டினாலும், கெஞ்சினார். அந்தச்சமயம். அதை நினைக்கவும் அவருக்குத் தலைக்குனிவு, மூர்த்தி ஒரு நிபந்தனை கூறினான்.

"சரி, உங்களிஷ்டப்படி நடக்கணுமானால் எனக்கு ஒரு நல்ல சைக்கிளும், கைக்கடிகாரமும் வேணும்! என்றான்.

"அடப்பாவி! விற்கிறாயா உன் கொள்கையை! ஆஹா! உன் சங்கப் பற்று இவ்வளவுதானா?" என்று கொதித்தார் துரைசாமி. நிபந்தனையை ஏற்க மறுத்தார் அவன் எப்படியானும் போகட்டுமே என்று வெகுண்டார். நாகலக்ஷ்மிதான் பொரிந்து கொட்டி அவர் மனம் மாற்றினாள். "இவன் இந்த மாதிரி பேசுவதனால்தான் கொள்கையும் கூட்டமும் சரியல்ல என்று தெரிகிறது! அவன் இதை விட்டொழிக்கும் வழி பாருங்கள்! அவன் கொள்கையைவிட முடியாது என்றால் அவன் மனம் பண்பட்ட மனசாயிருக்கவேண்டும்! பண்பட்ட மனத்தினனுடைய கொள்கையிலும் உசத்தியிருக்க வேணும்! அவன் கொள்கையை விற்கத் தயார் என்பதனால்தான் நீங்கள் அவனை அதிலிருந்து மீட்கணும்!" என்று வாது செய்தாள். எதிர் வாதாட வகையின்றி, அவர் ஒவ்வினார்.

ஆனால் ஒரு விஷமம் செய்தார். அவராகப் பணம் போட்டு அந்த ஈடுப் பொருள்களை வாங்கித் தர விரும்பாத அவருக்கு இந்த ஒரு யோசனைதான் தோன்றிற்று. தமக்குப் பரிச்சயமிருந்த ஒருவருடன் திருமண சம்பந்தம் செய்தார். அவருடைய பெண்ணைத் தம் நாட்டுப்பெண்ணாக ஏற்கும் முறையிலே பிள்ளைக்கு அவன் கேட்ட இரண்டு பொருள்களைச் சேர்த்துவிடும் முறை கண்டார்.

சிறு பிள்ளைக் கூச்சமுடன் - இருபத்திரண்டாண்டு மட்டுமே கண்ட கூச்சமுடன் - மூர்த்தி திருமணத்திற்கு முரண் செய்தபொழுது தந்தையின் 'இந்தத் தந்திரம்' அறிந்திருக்கவில்லை

நிகு நிகுவென புதுப்பருவச் செழிப்புடன் விளங்கும் பதினைந்து வயதுப் பெண் ஹேமா அவன் முன் காட்சியளித்தபோது வியந்த அவன், தந்தை "அப்புறம் கிடைக்க மாட்டாள்!" என்று எச்சரிக்கவே, சங்கோசமுடன் சம்மதம் கொடுத்தான் மூர்த்தி. அவனைக் கற்பனையுலகிலே இழுத்துவிட்ட பிறகு, "உனக்குச் சைக்கிளும் கைக்கடிகாரமும் சேர்ப்பித்து என்வாக்கை நிறைவேற்றிக் கொள்ள வேறு வழிகிடையாது!" என்று அவர் சாப்புச்சொல்லி உண்மை மொழிந்தபொழுது அவன் அவரை மறுத்துப் பேசவும் முடியவில்லை.

பிள்ளையைத் தம் வழிக்குக் கொணர்ந்து தாலியை ஏந்திக் குனியத் தயார் செய்தவர், மனைவியை கூறைப் புடவை பொறுக்கத் தயார் செய்துவிட்டார் எளிதிலே. "'பிள்ளையைப் பெற்றவன்' என்ற தோரணை இல்லாமல் நடந்துகொள்ள வேணும் என்பது என் நெடுநாள் ஆசை! அது பலிக்கிறது என எனக்கு ஆனந்தம்! நீ அதிலே பங்குகொள்ள வேண்டாமா?" என்று கூறி அவளுக்குச் சொக்குப்பொடி போட்டுவிட்டார் . . .

அப்படிப்பட்டவர் . . . .இன்று. பிகுவாக இருக்கணும் என ஆசைப்படுகிறார்! வலுவிலே பெண் கொள்ள வந்த தங்களை அவர்கள் அலக்காகப் பார்க்கிறார்கள் என்பதை அவர் உணருகிறார்! . . . .

நாகலக்ஷ்மிக்கு இந்த விஷயத்திலே திருப்திதான்; கணவர் இன்று புதுப்போக்குடன் பேசுவதை ரசித்தாள். அன்று தன்னிடம் கண்டிப்புப் பேசிச் சம்பந்திகளைத் தாங்கினார் - இன்று உணருகிறாரல்லவா தன்னுடைய அன்றையப் பேச்சின் உண்மையை? இந்தத் திருப்தி அவளுக்கு.

ஆனால், பிள்ளை ஏன் தலைத் தீபாவளியின் மவுசை இழக்க வேண்டும்? இதுதான் அவள் நெஞ்சிலே உறுத்திற்று. அவரிடம் பளிச்சென்று சொல்ல அவளுக்குத் தயக்கம்; அதுவுமின்றி அவருக்கே இதெல்லாம் தெரியாதா?

திருமணம் முடிந்த பிறகு மூர்த்தியை அவரேதானே, "'அழைத்து பேசேன், ஹேமாவுடன்?'" என்றார்? அவன் கூசினபொழுதிலே "வெட்கமானால் பேசாவிட்டால் போ! கடிதமாவது போடு அவளுக்கு!" என்று ஹேமா காதிலேபடுமாறு அவளிடம் கூறிவிட்டுச் சிரித்தார்! "நம் வீட்டில் தான் சிறுகு முறுகு என்று இளம் தம்பதிகள்!" என்று அவர்களைப் பார்த்து ஆஹ்லாதமுடன் இறுமாந்தார்! மூர்த்தி புது உத்தியோகம் ஏற்க ஊருக்குப் புறப்பட்டபொழுது "அவளுக்கு அங்கே கடிதம் போடு! இங்கே எங்களுக்கு மட்டும் போடுவது என்றிருக்காதே!" என்று சொன்னார்? "வீடு தேடு! குடித்தனம் போட்டுவிடலாம்!" என்றார் இப்பவும் அடிக்கடி அவனுக்கு எழுதுகிறார்? . . .

திடீரென்று ஒரு மாறுதல் நாகலக்ஷ்மியின் அந்தரங்கத்திலே. பிள்ளையைப் பெற்று மருமகளைப் படைத்துவிட்ட மாமிக்கே உரியதான மனத்தாங்கல்! 'உம்! இப்போ அவன் போகாவிட்டால் என்ன? ஆச்சு! வீடு கிடைத்துவிடப் போகிறது!அவளே வந்துவிடுவாள் குடித்தனம் பண்ண? . . . ' என்று ஒரு எண்ணம். பிள்ளை பால் பரிவுணர்ச்சி தளர்ந்தது.

தீபாவளிக்கு இன்னும் மூன்றே நாள். இப்பொழுது நாகலக்ஷ்மிக்கு யோசனைகள் சற்று வலுத்தன பிள்ளை அங்கே எப்படி மனந்தளறியிருக்கிறானோ என்றும் கனிவு.

"ஏன்னா? தீபாவளிக்குப் போனால்தானே ஆடிக்கு வராததையும் வரப்பண்ணலாம்? போகாமலேயே இருந்துட்டா அவாளுக்குச் சௌகரியமான்னாபோயிடும்?' என்று சொல்லிப் பார்த்தாள்.

"அதெல்லாம் அவனுக்கு வந்து சேர வேண்டிய சீர் அங்கே வந்துடும்! அனுப்பச்சொல்லிவிட்டேன்!" என்றார் அவர்.

"உம்! கடைசியிலே அவனுக்கு அனுமதி எழுதிப்போடல்லையாக்கும்? அழைப்பு வந்தவுடனே நீங்கள் 'போ'ன்னு எழுதிப்போடல்லையாக்கும்! அழைப்பு வந்தவுடனே நீங்கள் 'போ'ன்னு எழுதிப்போட்டிருந்தால், அந்தக் கடிதாசியை நாலு நாளாக வாழ்த்திக்கொண்டிருந்திருப்பான்!" என்று அவர் செவியில் பட்டும் படாமலிருக்குமாறு கூறிவிட்டுப்போனாள் நாகலக்ஷ்மி.

அதைக் கேட்டும் கேட்காதவர்போல துரைசாமி, புன்னகையின் பொருள் புரியாத குறையாகப் புன்னகை புரிந்தார்.

•• •• ••

ஆம் கடிதம் வந்திருந்தால் அதை வாழ்த்திக் கொண்டிருந்திருப்பான் மூர்த்தி. ஆனால் கடிதம் காணோம்? . . . அந்த வராத கடிதத்தைச் சபித்துக் கொண்டிருந்தான் மூர்த்தி.

அவனுக்கு அழைப்பு வந்த தினத்தன்றே அப்பாவுக்கும் ஒரு அழைப்புக் கடிதம் போயிருக்க வேண்டும். அவனுக்குத் தெரியும், ஆம் ஹேமு மூலம் அவனுக்குத் தெரியும்.... அவர் அதைக் கண்டுவிட்டு, "ஒரு வாரம் முந்தி போகாவிட்டால் போகிறது! முதல் நாள் போய்ச் சேர், போதும்! என்று அனுமதிக்கடிதம் போட்டுவிடுவார் என்று அவன் நம்பினான் அந்தக் தடைக் கடிதத்திற்கு மாற்றுக் கடிதம் வந்துவிடும் என்று உறுதியாக எதிர்பார்த்தான்; அவருடைய தடைக் கடிதத்திலேயிருந்த குற்றச்சாட்டு விளக்கங்களை அப்பொழுதே நம்ப முடியாத அவனுக்கு அழைப்பு வந்துவிட்டது என்றதுமே. இந்த ஆவல் - நம்பிக்கை தான் மனதிலே. இன்னும் தீபாவளிக்கு மூன்றே நாள்.

கடிதத்திற்காக தினம்போலக் காத்துக்கிடந்தால், தினம்போல ஏமாற்றமாகுமோ என்ற அச்சமோ, அன்றி நண்பனின் எதிரே கடிதத்திற்கு ஏங்கும் முகத்துடன் நடமாடக் கூச்சமோ, காலையில் வெளியே கிளம்பிவிட்டான் மூர்த்தி. ஒரு மணி நேரங்கழித்து ஜாகைக்குத் திரும்பி வந்து மேஜைமேல் கண்ணோட்டம் போட்டான். உஹூம் ஒரு கடிதமும் காணோம்.

அங்கே சற்று தள்ளினாற்போல் ஜன்னலருகு கண்ணாடியிலே தலைபார்த்து வாரிக்கொண்டிருந்தான் அவன் நண்பன் மணி.

“என்ன மணி? வந்தாச்சா செக் இன்னிக்கு? கடைக்குப் பயணமா?' என்று அவனைக் கேட்டான்.

மணிக்கா தெரியாது நண்பனின் கேள்விக்கு மறைபொருள்?

“வரல்லையே! . . . ஆனால்கூட நான் கடைக்குத்தான் போறேன்! என்றான் மணி (கடைக்கா? புளுகு!)

“வரல்லையா இன்னும் செக்?” என்று குட்டுக் கேள்வி, கூட்டிப் போடப்பட்ட துடிப்புடன் வெளிவந்தது.

“வரல்லே! . . . என்னமோ நமக்குச் சம்பளம் வரலையா? ஆனால் மாமனார் பணம் வந்து வாங்கிண்டோம்னு இருக்கட்டுமேன்னு எனக்கு, இந்த மூன்றாந் தீபாவளிக்காரனுக்கே - ஆசைதான்! . . . நீயும் தலை தீபாவளியாச்சேன்னு ஏதோ பார்த்துண்டிருக்கே.... அதென்னடான்னா.....”

“பாரேன் இன்னும் கொஞ்ச நாழி! செக் வரதோ என்னமோ? மாற்றி இந்தப் பணத்துலேயே வாங்கிக்கோயேன்!” என்றான் மூர்த்தி. அவன் முகத்திலே சற்று தெளிவு.

“தபாற்காரன் வரதா? அவன் வந்து போயாச்சோ! எனக்கு இரண்டு கடிதம் வந்திருக்கே! ஒண்ணு.... அவள்.... ஒண்ணு ஒரு பிரண்டு.....

மூர்த்தியின் முகம் வெளிச்சத்திலே மத்தாப்புப்போல சோடை குன்றிவிட்டது. அவன் “ஓஹோ! வந்தாச்சா?. . . ” என்று தடுமாறினான். சற்றுமுன் நண்பனின் கேள்வியின் மறைபொருளை அறியாதவன்போலப் பாவனை செய்த மணி இப்பொழுது பட்டாசு வெடிபோல விஷயத்திற்கு வந்தான்.

“அதென்னவோப்பா! உனக்குக் கடிதம் காணோம்! தலை தீபாவளிக்குப் போகிறதாக ஒரு உல்லாச வர்ணனைப் படலம் எழுதித் தள்ளியிருந்தான் ஒரு சிநேகிதன்! இங்கே நீ என்னடான்னா என் கண்முன்னே வாடி . . .”

மூர்த்தி குறுக்கிட்டான். "வாடறது என்ன! எனக்கு அப்படியொன்றுமில்லே! அப்பா சொல்லமாட்டார் இப்படி எல்லாம்!....... அவரே சொல்றார்னா அதுலே நியாயமிருக்காதா?... ஆடிக்கு அழைப்பு வரதுதானே . . . ." என்று தயங்கினான்.

அப்பாவின் மனம், பெருங்குணம் படைத்த அந்த விசால மனம் இப்படி ஒரு முக்கியமான கட்டத்திலே குறுகிப் பின்வாங்கிவிட வேண்டுமா? என்று அவனுக்கு உள்ளூர ஏக்கம் இது.... மணிக்குப் புலனாயிற்று.

மணி சிரித்தான் எகத்தாளமாக. 'உன் வேட்டகக்காரா செய்ய வேண்டிய சீர் போதாதே உங்கப்பாவுக்கு! ....அதற்குத்தான் நீயும் உன் பயம், வெட்கம், உரிமை, வயசு எல்லாம் அவருக்குச் சீர் பரப்பிவிட்டே போலிருக்கு! பேஷ்!'

மூர்த்திக்கு அப்பாமேல் கோபம் தான். தன்னையும் மனங்குன்றச் செய்து ஒரு நண்பன் முன் நிறுத்திவிட்டார். நண்பனின் மதிப்பிலே அவரும் தாழ்ந்துவிட்டார்... ஏன் இப்படிப் போய்விட்டது அவர் போக்கு?

மூர்த்தியின் முகம் கண்டு கனிந்தது மணியின் மனம்.

"மூர்த்தி! அப்பாவுக்கு ஒரு கார்டு எழுதிப்போடேன்!"

"என்னவென்று?"

"'நாளையோ, நாளை மறுநாளோ வேட்டகம் போகிறேன்,'அப்படீன்னு எழுதிப்போடு!"

"ஐயோ! வேண்டாம்! பதில் வரவேண்டாமா?"

"பதிலும் வரவேண்டாம்! மதிலும் வரவேண்டாம்! நல்ல மதிலப்பா உங்கப்பா - உனக்கும் உன் மிஸ்ஸஸ்ஸுக்கும் நடுவில்!"

"அப்பா அப்படியெல்லாம் நியாயமில்லாமல் சொல்லமாட்டார் . . . !"

"நியாயம்! சே! நல்ல நியாயம் பேசறே நீ! மனசு 'அநியாயம்'ங்கிறது! உனக்கும் போகணும்னு இருக்கு!. . . "

"அதெல்லாம் எனக்கொண்ணும் இல்லே..."

"சட்! அளக்காதே!... நீ அப்படிச் சொன்னாலும் எனக்குத் தெரியும்பா! என் அனுபவம் சொல்றதே! . . " இப்படிச் சொல்லிவிட்டுச் சிரித்தான் மணி.

"ஐயோ.... அப்பாவிப் பிள்ளை!... என் வாயை மூட உனக்கு இந்தப் பதில் சொல்லத் தெரியல்லையே!.... நானே சொல்லிக்க வேண்டியிருக்கு . . . "என்று மேலும் சிரித்தான்.

மூர்த்தியும் கொஞ்சம் சிரித்தான். வேதனை அவனை வாய்விட்டுச் சிரிக்க வைக்கவில்லைபோலும்!.........

"அப்பாவின்னு நீ சொல்லு!... சங்கக் கிறுக்குன்னு, பொல்லாதவன்னு எனக்கு வந்த கெட்ட பேர் உனக்கு என்ன தெரியும்?" என்று மெள்ளச் சொன்னான் மூர்த்தி.

மணி வாய்விட்டுச் சிரித்தான்! . .. "ஓஹோ ஹோ!.......ஆமாம்!..... உன் 'ஹேம்' கூட ஏதோ குட்டாக் கேட்டிருக்காப்போல நீ பேசினே! . . .தெரியும் . . ."

'ஹேம்' என்ற பெயர் கேட்டு மூர்த்தியின் முகம் கண்ட மாறுதலை மணி கவனித்துவிட்டான்.

"மூர்த்தி . . . சொல்றேன், கேளு! புறப்படு!" என்றான்.

"அதெல்லாம் அப்பா காரணமில்லாமல் ஒண்ணும் சொல்லமாட்டார் . . ."

மணிக்குக்கோபமே வந்துவிட்டது.

"சே! நல்ல நியாயம், போப்பா!. சே! நான் போறேன்! நீ உன் இஷ்டமானபடி எழுது! எழுதாதே!.... நான் போஸ்டாபீஸ் போகணும்!. . . "

ஐயோ நண்பன் கோபங்கொண்டுவிட்டானே! பேசாமலே இருந்து விட்டால் இன்னும் விபரீதம்தான். மூர்த்திக்கு இந்தக் கவலை

"என்ன, போஸ்டாபீஸுக்கா? கடைக்குன்னயே!" என்று கேட்டு வைத்தான்.

மணி சற்று திடுக்கிட்டாற்போலத் திரும்பினான்.

"ஓ! ஆமாம்! கடைக்குன்னேனா? ஆமாம்! போஸ்ட் ஆபீசுக்குப் போயிட்டு, அப்ப டீ கடைக்குப் போவேன்! என்று சிரித்துக் கூறிவிட்டு சற்று மெல்ல, "மூர்த்தி! ஒரு வார்த்தை! நீ ஒரு காரியம் செய்! தீபாவளிக்கு உன் மாமனாரகம் போகாட்டால் அப்பா அம்மா கிட்டவானும் போயேன்! நானும் அநேகமாய் என் மாமனார் வீடு போவேன், மூன்றாந்தீபாவளியை மனைவியோடயும் குழந்தைகளோடயும் பகிர்ந்துக்க!" என்றான்.

மூர்த்தி துணுக்கமுற்றாபோலானான் "அப்படியா? நீயாவது இருப்பேன்னு பார்த்தேன்..."

பல பல காரணங்களால் மேலே பேசுவதை நிறுத்தினான்; தன்னுடைய ஏக்கம் பளிச்செனத் தெரிந்து போகுமோ? நண்பன் மாமனாரகம் போவதை மறுத்துப் பேச உரிமை தான் கொண்டாடலாமா?

மூர்த்தி நினைப்பதை மணி ஊகித்துவிட்டான் சிரித்துக்கொண்டே "மூர்த்தி! நீ ரொம்ப சாது.... சாதுதான். என்னைக் கொஞ்சம் திடுக்கிட வச்சு விஷயம் கறந்துட்டயே! உனக்குத் தெரியாமல் திருட்டுத்தனம் பண்ணத்தான் போஸ்டாபீஸ் பயணமானேன்!"என்று சிரித்தான்.

"ஓ! அப்படியா?... அதற்கா நீ குட்டாய் இருந்தாய்? போஸ்டாபீஸ் போகிறாய்?" என்று நினைத்துச் சிரித்தான் மூர்த்தி 'உம்!.... போ!.... எழுதிப்போடு!' என்றான், தான் ஏதோ கண்டுபிடித்துவிட்ட பாவனையிலே. அப்பாவி! அவன்தான் சங்கோசக்காரன் என்றால், மணியும் அப்படியாயிருக்கான் சுபாவத்திலே...?

மணிக்குச் சிரிப்பு வந்தது. "மூர்த்தி! நீ ஒரு தந்தி கொடுத்துடு உன் அப்பாவுக்கு!" என்றான்.

"என்னவென்று?"

"'அங்கே வரேன்,' அப்படீன்னு!"

'அங்கே போறேன்னு அப்பா நினைச்சூட்டால்?" என்றான் மூர்த்தி திகிலுடன்.

"நான் அதை யோசனை பண்ணாமலா சொல்கிறேன் இதெல்லாம்!... அப்படி நினைக்க முடியுமா? நினைப்பாரா உன் மாதிரிக் கோழைப்பிள்ளையைப் படைத்த ஒரு அப்பா! இங்கிலீஷ் வாசகமானாலும் 'வரேன்', 'போறேன்' என்கிறதுக்கு வித்தியாசம் பளிச்சுன்னு தெரியும்! பயப்படாதே!' என்று சொல்லிச் சிரித்தான் மணி.

"சரி, ஆனால் தந்தி எதுக்கு மணி? இன்னிக்குக் கடிதம் போட்டால் நாளைக்குப் போயிடுமே! நாளைக்கு நான் புறப்பட்டால் போதாதா?"

'வேண்டாம், தந்தியே கொடு! நீ இன்னிக்கே புறப்படேன்! . . . ஏன், வேட்டகம் போறதானா எத்தனை சீக்கிரமானாலும் புறப்படலாம்."

இந்தக் கேலிக்குப் பயந்தோ, அல்லது வேறு என்ன உத்தேசமோ "சரி, இன்னிக்குப் புறப்பட்டுடறேன்; தந்தி கொடுத்துடறேன்!" என்று ஒப்புக் கொண்டுவிட்டான் மூர்த்தி.

"சரி, ஆனால் மூர்த்தி! நான்தான் இப்போ போஸ்டாபீஸ் போறேனே? உன் பேரிலே அடிச்சுடறேனே! அடிச்சுடட்டுமா? தந்தியில் நீ எழுதர கையெழுத்து அங்கே உன் அப்பா பார்க்க முடியாது! அது தெரியுமோன்னா?"

'ஐயோ அது தெரியாதா எனக்கு? மூன்றாம் மனிதன் மூலம் போகும் தந்தியை நண்பன் அடிப்பதிலே ஆக்ஷேபனையா? ஆக்ஷேபனையென்று நினைத்துவிடப் போகிறானே?' மூர்த்தி சிரித்தான். "எனக்குக் காரியம் லாபம்னா! இந்தா. பணம்!....தரேன். 'லீவு தாராளமாயிருக்கு! அங்கே, வந்துடறேன்!' அப்படீன்னு அடி!... போதும்! அப்பா அட்ரஸ் தெரியுமோன்னோ?"

"ஓ! பேஷாத் தெரியும்! உன் அப்பா அட்ரஸூம் தெரியும்! உன் மனைவி அட்ரஸ்.... அடடா, தப்பு.... உன் மாமனார் அட்ரஸூம் தெரியும். இத்தனை நாள் இங்கே உன்னோடு பழகின இந்த இருபத்தைந்து வயசுக்காரன், எனக்கு இது தெரியாவிட்டால் எதுக்குப் பிரயோசனம்! உம், பணம் எத்தனை! ஓ! போதும்! போய் வரேன்!"

மணி போய்விட்டான் தந்தி கொடுக்க. அரை மணிக்கு முன்பு மூர்த்திக்கு இருந்த மனச்சோர்வு இப்போது இல்லை.

அவன் மனதிலே ஒரு பிரார்த்தனை, ஒரு நம்பிக்கை, ஒரு தெளிவு.

தந்தி அப்பா மனதிலே வேலை செய்யட்டும்! 'அங்கே வருகிறேன் அப்பா! லீவு இருக்கு!' என்று இவன் கேட்பதை அவர் கனிவோடு கவனிக்கட்டும்! இவன் தனியே பண்டிகை கொண்டாட விரும்பவில்லை என்பதை யோசிக்கட்டும்.

'லீவு இருந்தால் அங்கேயே போயேன்!' என்று அவர் அனுமதி கொடுத்துவிடட்டும்! இது அவன் துதி.

அனுமதி தந்திமூலம் வந்தால், இன்றே போகலாம். நாளை கடித மூலம் வந்தாலும், நாளை புறப்பட்டால் அங்கே போய்ச் சேர்ந்துவிடலாம்'... இது அவன் காதல் மனத்திலே கற்பனை.

'அனுமதி வந்துவிடும்! தந்தி கண்டு அப்பா மனமிளகி, பழைய விசால மனம் உந்த அனுமதியளித்துவிடுவார்!' என்றது அவனுடைய பிள்ளை மனத்திலே நம்பிக்கை. அதனால் காதல் நெஞ்சிலே ஒரு தெளிவு.

அப்பாவியென்று நண்பன் கூறிவிட்டாலும் தான் தந்தியடிக்க ஒப்பியபொழுது, தன் மனதிலே தோன்றிவிட்ட குறும்பு எத்தகையது என்பதை எண்ணிப் பார்க்க, மூர்த்தியின் முகத்திலே ஒரு புன்னகை தோன்றியது.

** ** **

"தந்திகளை அடிச்சுட்டேன்! என்றவாறே திரும்பி வந்தான் மணி.

'தந்திகளையா? எத்தனை தந்தி? யாருக்கு?"

"இரண்டு. ஒன்றுதான் உங்கப்பாவுக்கு! இன்னொண்ணு மாமனாரகத்துக்கு!" என்று கூறிச் சிரித்தான் மணி.

"ஓ!.... நீ நாளைக்கே புறப்படறயா?'

"ஆமாம்! நீ இன்னிக்கு ராத்திரி தானே?"

"ஆமாம் . . . "

"லீவுக்கு எழுதிக் கொடுத்துடு!"

"கொடுத்துடட்டுமா இன்னிக்கே?"

"உம்! பேஷா!"

நண்பர்கள் இருவரும் கொஞ்ச நேரங் கழித்து அவரவர் ஆபீஸ் போகப் பிரிந்தனர்.

ஆனால் அன்று பிற்பகல் மூர்த்தியின் பெற்றோர் இந்த நண்பர்கள் இருவரையும் பிணைத்துப் பிணைத்தும் பேசித் தீர்த்தார்கள்.

'தந்தி' என்ற சொல் கேட்டதுமே பதறி ஓடின அந்தத் தம்பதிகள், தந்தி வாசகம் கண்டு மேலும் பதறி அயர்ந்து ஓய்ந்தார்கள்.

"லீவு தாராளமாக இருக்கிறது! நான் அங்கே போய்விடுகிறேன்!" என்று மூர்த்தி தந்தி கொடுத்திருந்தான்!

துரைசாமி நிஜமாக அசந்து போனார்.

"சரிதான்! பிள்ளையின் மனசு தெரிஞ்சு போச்சு!" என்றார் குத்தலாக.

"உங்கள் மனசு மாறித்தே! அவன் மனசு மட்டும் மாறாதா என்ன? மாறக்கூடாதா என்ன? நான்தான் எப்பவும் எதிலேயும் ஒருத்தி தனி!" என்று கிண்டலும் கோபமும் வெளியிட்டாள் நாகலக்ஷ்மி.

"அந்த ஒரு சிநேகிதன் மணி, அப்போ படிக்கிற காலத்துலேயும் அவன்கூட இருந்து இப்பவும் வேலை பார்க்கிறபோதும் கூடச் சேர்ந்துண்டு அவனை இந்த ஆட்டம் ஆட்டி வைக்கிறான் போலிருக்கு!" என்றார் துரைசாமி கோபமாக.

"ஆமாம்னு நானும் சொல்றேன்! அப்போ 'சைகிளும் கடிகாரமும் கேளு'ன்னு அவன் சொல்லித்தான் இவன் கேட்டிருப்பான்னு நினைக்கிறேன்! இப்பவும் உங்கள் பேச்சுத் தட்டி விட்டுப் போகச் சொல்லியிருப்பான்!" என்று ஆமோதித்து ஆத்திரப்பட்டாள் நாகலக்ஷ்மி.

கொஞ்சநேரம் இப்படி ஏகோபித்த ஆத்திரம் காட்டிப் பேசிய தம்பதிகள், சற்று நேரங் கழித்து ஓய்ந்துபோனார்கள்.

"என்னவானும் எழுதப்போறேளா?" என்று கேட்டாள் நாகலக்ஷ்மி.

"சுருக்கமாக 'உன் இஷ்டம்போல் செய்!' என்று தந்திப் பதில் கொடுக்கப்போகிறேன்!"

"தந்தி மாதிரி சுருக்கமான பதிலா? பதில் தந்தியா?"

"பதில் தந்தி, தந்திப் பதில், இரண்டுந்தான்!"

"தந்தி எதுக்கு அவனுக்கு! அது வேறே எதிர்பாராத செலவா.....?"

"எதிர்பாராத செலவா? . . . எல்லாம் நான் எதிர்பார்த்த செலவு தான்! நானே ஒரு தந்தி கொடுக்க சாயந்திரம் போகணும்னுதான் எண்ணிண்டிருந்தேன் . . . "

"எதுக்கு? யாருக்கு?"

"ஆமாம் போ! இப்போ இதெல்லாம் உனக்குச் சொல்லணுமாக்கும்! சொல்லி ஒண்ணும் பிரயோசனமில்லை!"

"ஏன் சீறி விழறேள்? பிள்ளை மேலே கோபம்னா என் மேலே ஆத்திரம் வருவானேன்?"

"ஆமாம் போ! . . ."

துரைசாமி சீற்றமுடன் தந்தியாபீஸுக்குப் போய் தம் கோபத்தையெல்லாம் சுருக்கமான ஒரு வாக்கியம் மூலம் பதித்துவிட்டுத்தான் வந்தார்.

அந்தத் தந்தி பாதி வழி வந்திருக்கும் சமயம் நண்பர்கள் இருவரும் தத்தம் ஆபீஸிலிருந்து ஜாகை வந்து சேர்ந்தார்கள்.

"நீ இன்றைக்கு ராத்திரியே புறப்படறயா? மூர்த்தி?" என்று கேட்டான் மணி.

"அதான் பார்க்கிறேன் இன்றைக்குப் போகட்டுமா? நாளைக்குப் போகட்டுமா? லீவு கிடைச்சுடுத்து" என்றான் குரல் இழுபட.

அப்பாவின் அனுமதித் தந்தி காணோமே! கடிதம் நாளை வரலாம்! இது மூர்த்தியின் யோசனை.

"எனக்கும் யோசனையாயிருக்குப்பா! நாளைக்கு நான் போகல்லை! நாளன்னிக்குப் போறேன்! நீயும் நாளைக்குச் சாயந்திரம் போ!" என்றான் மணி.

உடனே ஒப்பிவிட்டான் மூர்த்தி. மணிக்கு என்ன யோசனை என்று அவன் எண்ணினாலும் ஒரு வார்த்தை கேட்கவில்லை.

மணிக்குச் சந்தோஷம். "மூர்த்தி! நான் சொல்றதை நீ தட்டுகிறதில்லைப்பா! எனக்கு இது ரொம்ப பெருமையாயும் சந்தோஷமாயும் இருக்கு!" என்றான் மூர்த்தி முதுகிலே தட்டிவிட்டு. மூர்த்தி முறுவலித்தான்.

முழு வழி வந்துவிட்டது தந்தி. ஏழு மணிக்கு தந்திக் குரல் கேட்டு நண்பர்கள் இருவரும் படபடப்புக் கொண்டார்கள். ஓடிப்போய் தந்தியை வாங்கினான் மூர்த்தி மூச்சைப் பிடித்துக்கொண்டு கவனித்தான் மணி. தந்தியை முதலில் பார்த்துவிட அவனுக்கு ஆவல்தான்; கேட்டாலும் மூர்த்தி தந்தேயிருப்பான்... ஆனால், மணிக்கு ஏனோ இதற்கு மட்டும் துணிவு இல்லை.

தந்தியைப் படித்து நெற்றி சுருங்கியது மூர்த்திக்கு. ஐயோ! விரும்பத்தக்கதாக இல்லையோ விடை? மணி பதறி ஓடி தந்தியை வாங்கிப் படித்தான். அவன் முகம் மலர்ந்தது!

தந்தி - "உன் இஷ்டம்போல் செய்!"

"மூர்த்தி! ஏண்டா அப்படி இருக்கே! உம் புறப்படு! மாமனாராத்துக்கு! நான் எதிர்பார்த்தது தாண்டா இந்தப் பதில்! இதே பதில்தான் வரட்டுமேன்னு ஆசைப்பட்டேன்!" என்றான் மணி குதூகலம் பொங்க.

"நானும்தான் எதிர்பார்த்தேன்...."

"என்ன! நீயுமா? . . . "

"ஆமாம் . . . 'லீவு இருக்குன்னா அங்கே போயேன்'னு சொல்வார்னு நினைச்சேன் . . .ஆனால் கோபமான்னா சொல்றார் . . . "

"ஓஹோ?' என்று சிரித்தான் மணி.

"அப்படி எதிர்பார்த்தயா?... ஆனால் அவர் உன் இஷ்டம் எப்படியோ, கல்யாணத்துக்கே உஹூம் னவனாச்சேன்னா இப்படி எழுதிவிட்டார்? உனக்கு மாமனாராத்துக்குத்தான் போக இஷ்டம் இருக்கும்னு நம்பி, 'இங்கேயே வா'ன்னு எழுதாமல், இப்படியாவது சொன்னாரே! அதுக்குச் சந்தோஷப்படு!' என்றான் மணி சிரிப்புக் கொழிக்க.

"ஆமாம்.... ஆனால் என்னவோ கோபமா சொல்ற மாதின்னா இருக்கு? பளிச்சுன்னு 'போ'ங்கல்லையே!'

"சே! சே! கோபமா? தந்தி வாசகம் அப்படித்தான் தொனிக்கும்! நீ போ. உம், சந்தோஷமா, உற்சாகமா, மூட்டை கட்டு . . . "

மூர்த்திக்கு இந்தக் தேறுதல் போதும் அந்தச் சமயத்திலே. அவனையறியாமல் கண் கடியாரத்தின் மேலே சென்றது.

"இந்த ராத்திரியே புறப்படு! என்று மணியின் கட்டளை பிறந்தது.

"போப்பா, நாளைக்குத்தான்!.... இன்னிக்கு டயம் இல்லை"

"இன்னும் இரண்டு மணி நேரம் கிடக்கு. டயம் இல்லையாம்! . . . ஷேவ், கீவ் எல்லாம் நாளைக்கு வச்சுக்கோ!.... தாடி இராத்திரி வளர்ந்துடும், இப்போ வச்சுக்காதே!... அதெல்லாம்! நான் நாளைக்கே விடிய காலம் போறேன் தெரியுமோன்னோ?"

"ஓ! காலையிலேயே போறயா? சரி நானும் அப்படீன்னா . . . "

மூர்த்தி பெட்டியண்டை குனிந்தான் தன்னுடைய மலர்ந்த முகத்தை நண்பன் பார்க்கக்கூடாதாம்! . . . ஆனால் பெட்டியருகு அவன் குனிந்த தோரணை? அது அவனைப் போல 'பொல்லாத அப்பாவி'யாயிற்று.

மூர்த்தி பெட்டி படுக்கை சகிதம் ரயிலேறும்பொழுது மட்டும், மணியிடம் ஏற்பட்ட நன்றிப் பெருக்கு கிளர்ந்தெழுந்ததனாலோ என்னமோ மணியிடம் ஒளிவு மறைவு காட்டும் விதத்தில் இருக்கவில்லை, அவன் நடையுடை பாவனை.

"நீ என்னை இங்கே போகச் சொல்லி யோசனை சொல்லித் தந்தி கொடுக்க, இது எப்படியெப்படியெல்லாம் ஆச்சு பார்... வேடிக்கை, இல்லையா மணி?" என்று ஒரு தடவை

நன்றி பீற உரைத்தான். பலதடவை நன்றி துளும்பும் கண்களை மலர்த்தி அவனை நோக்கினான்.

ஆனால் அதே சமயம் அவன் பெற்றோர் மனங்கலங்கிக் கண்கலங்கி நின்றதை அவன் அறியான்.

பிள்ளை மீது கோபம் அல்ல அவர்கள் கலக்கத்திற்குக் காரணம்.

'ஹேமுவுக்குச் சுரம். மூர்த்தியை அனுப்பி வைக்கிறீர்களா?' என்ற சம்பந்திகளின் தந்தி அவர்களுக்கு இரவு ஒன்பது மணி சுமாருக்கு வந்தது.

"மூர்த்திக்கு மத்தியான்னமே தந்தி போயிருக்கும்! அதான் அவன் அப்படித் தந்தியடிச்சிருக்கான், 'போறேன்'னு! 'போகாதே!'ன்னு நான் அடிக்காமலிருந்தேனே, நல்லவேளை!' என்றார் துரைசாமி.

'அவன் இன்னிக்கே புறப்பட்டிருக்கலாம்! நாமும் போகலாமா?' என்றாள் நாகலக்ஷ்மி.

"வேண்டாம்! நாளைக்குப் பார்க்கலாம்!" என்றார் அவர். 'நான் சாயங்காலம் கொடுக்க நினைத்திருந்தேனே ஒரு தந்தி . . . அதே வேளைக்கு அங்கே புறப்பட்டிருக்கு இந்தத் தந்தி!' என்று எண்ணமிட்டது அவர் மனம். வந்த தந்தியைப்பற்றி அவர் கவலைப் பட்டார் - ஆனால் நாகலக்ஷ்மியை போல அல்ல!

** ** **

'அவள் ஊர் வந்துவிட்டது' என்று பரபரப்புடன் இரங்கினான் மூர்த்தி. ரயிலடியில் யாரையும் காணோம்! மணியை தந்தியடிக்கச் சொல்லியிருந்தான்; வந்துசேரவில்லையோ?

வீட்டைக் கண்டுபிடித்துப் போய்சேர்ந்தான். "தந்தி வரல்லையா?" என்று அப்புறம் மெல்லக் கேட்டான் மாமனாரை.

"உம், வந்தது. இதோ .. . .இதுவா?"

'தந்தி வந்துமா யாரும் வரவில்லை?' அப்பாவி மூர்த்திக்கும் மாப்பிளைக்கே உரிமையான கோபம் வந்தது. அனால் தந்தி . . ஐயோ, இதென்ன, இப்படியா? "'ஹேமா ஸிக்' என்று சங்கரனை அனுப்பக்கோரி அவன் தந்தைக்கு தந்தி அடிக்கவும்! நண்பன்!" இதைப் படித்து விழித்தான் மூர்த்தி.

"இதென்ன? இப்படியா வந்தது?"

"வந்திருக்கு, பாருங்களேன்! நேற்று மத்தியான்னம் இதை வச்சுண்டு ஒரு மணி நேரம் தவிச்சோம்!"

"நேற்று மத்தியான்னமா?"

"ஆமாம்!"

ஒருவாறு மூர்த்திக்கு விஷயம் புரியவாரம்பித்தது. தந்தியை உன்னிப் பார்த்தான். தந்தியிலே கையெழுத்து மணியினுடைதா என கண்டுபிடிக்க முடியுமா?

"நீங்களே தான் இதை அடிச்சேளா, மாப்பிளை? இல்லை, நண்பன் நிஜமாவே ஒருத்தன் இருக்கானோ?" என்று கேட்டார் அவர்.

ஐயோ, அவமானமே! 'அப்படி வேறே நினைக்கிறாரா?' என்று அலண்டு போய்விட்டான் மூர்த்தி.

"இது என் சிநேகிதன் மணியின் சூழ்ச்சிதான்! நேற்று அவன்தான் தந்தியாபீசுக்குப் போனான் . . . "

"அதென்னமோ . . .எனக்கு இது வந்தபோது ஒண்ணும் புரியல்லெ! ஆனாலும் நீங்களே இப்படி அடிச்சோளேன்னு நினைச்சு, 'சரி, ஹேமா லவ்ஸிக்தான்'னு நினைச்சுண்டு உங்கப்பாவுக்கு அடிச்சுட்டேன்! ராத்திரி போய்ச் சேர்ந்திருக்கும்!" என்றார் மாமனார் சிரித்து.

"ஓ!" என்றான் மூர்த்தி வெக்கமுடன். ஆன்னல் அவன் மனதிலே ஒரு கவலை.

கொஞ்சம் வெளியில் சுற்றிவிட்டு வருவதாகக் கூறிவிட்டுக் கிளம்பிய மூர்த்தி தந்தாபீஸ் போனான்.

"வந்துசேர்ந்துவிட்டேன்! அனைவரும் திடமே!" என்று தந்தைக்கு தந்தி அனுப்பிவிட்டான்.

நாட்டுப்பெண்ணின் உடல் நிலைக்குக் கவலைபட்டு அனாவசியமாய் அவர்கள் புறப்பட்டு வருவானேன்?

பிறகு ஹேமுவிடம் பேச அவனுக்குச் சந்தர்ப்பம் கிடைத்தபோது மட்டும். அவளை அவன் எவ்வளவுதான் காதலித்தாலும், இந்த வார்த்தை சொன்னான்:

"'ஆடி மாத சமயத்திலே எங்கள் சங்கத்தலைவரை நாங்கள் சந்திக்கிறோமா, என்னென்ன செய்கிறோம் என்று பார்க்கணும்' என்றுதானே 'ஆடிக்கு அழைப்பு அனுப்பாதே!' என்று உன் அப்பாவைத் தடுத்தாயாம்?உன் அப்பா சொல்கிறாரே? அதனால்தானே இத்தனை சங்கடம்? எங்கப்பாவுக்கு கோபம்?" என்று அவளைக் கேட்டான் மூர்த்தி.

"தப்புதான் நான் சொன்னது! சங்கக்காரனின் துணிச்சல்தானே இத்தனை ஆட்டம் பண்ணியிருக்கு? அதுவுமில்லாமல் நீங்கள் உங்கள் தலைவரையும் சகாக்களையும் விட்டாச்சோ? பார்க்கமுடியுமோ, இதெல்லாம்? என்னமோ யோசனைப் பண்ணாமல் சொல்லிவிட்டேன் வேறே!" என்று குறுநகை புரிந்தாள் ஹேமு.

அவளுடைய சமாதானம் அவனுக்கு ரொம்ப ரொம்ப ரொம்ப பிடித்திருந்தது.

"நீ ஆடிக்கு அழைப்பு அனுப்பவேண்டாம்னு இந்த காரணம் சொல்லித் தடுத்தது எங்கப்பாவுக்குத் தெரிஞ்சால் அவர் கோபம் போயிடும்! . . . ஏன்னா . . . " என்று தயக்கமுடன் நிறுத்தினான் மூர்த்தி.

"எனக்குத் தெரியும்!" என்றாள் ஹேமா. ஆவனுடைய அன்றையப் பொல்லாத்தனம் பெற்றோரை - முக்கியமாக தந்தையை, அவர்கள் கல்யாணத்திற்கு அடி கோலிற்று; இன்று . . . அவன் கோழைத்தனம் நண்பனின் பரிதாபத்தைக் கிளப்பிவிட்டு இவர்களுடைய சந்திப்புக்கு அடிகோலிவிட்டதா? . . . .

அதே சமயம் இங்கே இவன் பெற்றோரும் மூர்த்தியின் நினைப்பிலே புன்னகை புரிந்தார்கள்.

மூர்த்தியின் தந்தி கண்டு துரைசாமி மனைவியை அழைத்தார். "பயப்படாதேடி! திடந்தாமாம் எல்லோரும்! எனக்கு தோணித்து, சம்பந்தியின் தந்தி ஒரு தந்திரமாய் இருக்கலாம்னு" என்றார்.

"தெரியுமா?" என வியந்தாள் நாகலக்ஷ்மி! "உம், எனக்கும் மனசிலே ஒரு தந்திரம் இருந்ததோல்லியோ? . . . அதனால் . . ." என்று பெருமூச்சு விட்டாள்.

ஆம், அவரும் ஒரு தந்திரம் செய்திருந்தார். தந்தி யோசனை செய்து வைத்திருந்தார்.மனைவி தீபாவளிக்குப் புறப்பட கோடிக்கிறாள், பிள்ளை மட்டும் போகணும் தலைத் தீபாவளிக்கு, என்று எண்ணினார். பிள்ளையையும் கொஞ்சம் தவிக்க வைத்து கடைசியில் 'போ' என்று தந்தி அனுப்பி அவனை அனுப்பி வைக்க எண்ணியிருந்தார். ஆனால்? . . .குறும்புக்கார மணி ஏமாற்றிவிட்டான்! . . . .

**********

(சுதேசமித்திரன், அக்டோபர் 16, 1949)